பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 14 புதன்கிழமை (28.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 121

## செங்கலடி - கொம்மாந்துறையில்

# இராணுவ முகாம் அருகே தற்கொலைத் தாக்குதல்

# உழவு இயந்திரம் வெடித்துச் சிதறி 7 பேர் பலி

## ஈ.பி.டி.பியினர் - 3, படையினர் - 2, பொதுமக்கள் -2

கொழும்பு, மார்ச் 28

மட்டக்களப்பு செங்கலடியில் அமைந்துள்ள கொம்மாந்துறை படை முகாமை இலக்கு வைத்து நேற்றுக்காலை நடத்தப்பட்ட வாகன வெடி குண்டுத் தாக்குதலில் இராணுவத் தரப்பில் இருவரும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி) உறுப்பினர்கள் மூவரும் பொதுமக்கள் இருவருமாக மொத்தம் ஏழு பேர் உயிரிழந்திருக்கின்றனர். படையினர், பொலிஸார், பொதுமக்கள் உட்பட 28 பேர் படுகாயமடைந்திருக்கின்றனர்.

வெடி மருந்து ஏற்றிய உழவு இயந்திரம் (டிராக்டர்) ஒன்று இராணுவ முகாமினுள் நுழைய முயன்ற சமயம் வெடித்துச் சிதறியதால் இந்த அனர்த்தம் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசனில் நேற்றிரவு குண்டுச் சத்தங்கள்

காங்கேசன்துறை கடற்பகுதியில் நேற்றிரவு 7.45 மணி முதல் பெரும் இடியோசை போன்ற குண்டுச்சத்தங்களும் பலத்த வேட்டுச்சத்தங்களும் சுமார் அரைமணித்தியாலமாக தொடர்ந்து கேட்டவண்ணம் இருந்ததாக அப்பகுதியில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. வலி. வடக்கு பிரதேசத்தின் சுற்றுவட்டாரங்கள் எங்கும் அவற்றைக் கேட்கமுடிந்ததாகவும் அறியவந்தது.

பரா வெளிச்சக் குண்டுகளும் ஏவப்பட்டன. ஹெலிகள் அந்தப் பிரதேசத்தில் தாழப் பறந்து நோட்டமிட்டன.

காங்கேசன் கடற்பரப்பில் தாக்குதல் ஏதாவது நடந்ததா அல்லது கடற்பகுதியில் ஒத்திகை நடத்தப்பட்டதா என்பது குறித்து செய்தி அச்சுக்குப்போகும்வரை ஊர்ஜிதமான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. [அ-1-68]

## கனகராயன்குளத்தில் 'கிபிர்' குண்டுவீச்சு

கிளிநொச்சி, மார்ச்28

வவுனியா வடக்கு கனகராயன்குளம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் இரண்டு 'கிபிர்' விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தின.

இத் தாக்குதலில் வீடுகள் சில சேதமடைந்ததாகவும் கால்நடைகள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

வவுனியா வடக்கில் உள்ள விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையின் அலுவலகம் மீது விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தி அதை அழித்து விட்டதாக தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (அ-1)

## புலிகள் நடத்திய வான் தாக்குதல் குழப்பம் தருகிறது

**ஐ.நா. செயலாளர் நாயகம்**

வாஷிங்ரன், மார்ச்28

விடுதலைப் புலிகள் நடத்திய வான் தாக்குதல் குறித்துத் தாம் குழப்பம் அடைந்திருப்பதாக, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கி மூன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர்நிறுத்த மீறல்களின் மத்தியில் இந்த வாரத்தில் விடுதலைப் புலிகளின் வான் தாக்குதலும் நடைபெற்றிருக்கிறது.

விமானத் தாக்குதல்கள், இராணுவ மோதல்கள், தற்கொலைத் தாக்குதல்கள் இலங்கையில் நாளாந்த நிகழ்வுகளாகிவிட்டன. இவற்றால் மக்கள் பெரும் அவலங்களை அனுபவிக்கிறார்கள்; இடம்பெயர்கிறார்கள். இந்த நிலை மிகவும் மனவருத்தத்துக்குரியதாகும். -

தாக்குதல் நடத்துவதும் பதில் தாக்குதல் நடத்துவதுமாக இரண்டு தரப்புகளும் நச்சுவட்ட (04 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்க தாக்குதலை அடுத்து தமிழகத்தில் பாதுகாப்புத் தீவிரம்

சென்னை, மார்ச் 28

இலங்கையில் விடுதலைப் புலிகளின் விமானத் தாக்குதலையடுத்து, தமிழகத்தில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள இலங்கை விமானப் படைத் தளத்தின் மீது முதன்முறையாக விடுதலைப் புலிகள் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தங்களது விமானப் படை தாக்குதலால், இந்தியாவின் பாதுகாப்புக்கு எவ்வித நெருக்கடியும், அச்சுறுத்தலும் இல்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தமிழகத்தில் கல்பாக்கம் அணுமின் நிலையம், சென்னை, எண்ணூர், தூத்துக்குடி உள்ளிட்ட துறைமுகங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை, திருச்சி, கோவை, மதுரை உள்ளிட்ட விமான நிலையங்கள் உஷார்படுத்தப்பட்டுள்ளன. செங்கல்பட்டு, புழல், ராமேஸ்வரம் உள்ளிட்ட (03 ஆம் பக்கம் பார்க்க)

**புலிகள் பயன்படுத்தியது 'செக்' நாட்டு விமானம்:**

## கடல்போக்குவரத்துக்கும் வான்வழி அச்சுறுத்தல்!

கொழும்பு, மார்ச் 28

விடுதலைப் புலிகள் தங்கள் விமானப் பலத்தை வெளிப்படுத்தியிருப்பதை அடுத்து, இலங்கைத் தீவின் பாதுகாப்புக் கட்டமைப்பு முழுவதும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதாகக் குறிப்பிடும் பாதுகாப்பு ஆய்வாளர்கள், கடற்படையின் பெரிய கப்பல்கள் மற்றும் துருப்புகளின் கடற்போக்குவரத்து ஆகியனவும் பெரும் அச்சுறுத்தலுக்கு இலக்காகி இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீது நடத்தியிருக்கும் விமானத் தாக்குதலில், புலிகள் தங்கள் இலக்கை முழுமையாக அழிக்க முடியாமற் போயிருப்பதாகக் கூறப்பட்டாலும், அவர்களது விமானத் தாக்குதல் பலம் இலங்கைத்தீவு முழுவதினதும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்களால் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகள் அதிர்ந்தன

உடுப்பிட்டி, மார்ச் 28

நேற்று முற்பகல் தொடக்கம் மாலை வரை தொடர்ந்து இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களால் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகள் அதிர்ந்த வண்ணம் இருந்தன.

முள்ளி, வரணி, நாகர்கோயில், முகமாலை ஆகிய முகாம்களில் இருந்து நேற்றுக் காலை 10 மணிமுதல் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இயக்கச்சி, மருதங்கேணி, வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளை நோக்கியே இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு அகதிகளை அவர்களின் விருப்பத்துக்கேற்ப மீள்க்குடியமர்த்த பொருத்தமான நடவடிக்கை

### ஐ.நா. பிரதிநிதி கூட்டமைப்பிடம் உறுதி

கொழும்பு, மார்ச்28

கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் விருப்பத்திற்கு அமைய மீளக்குடியமர்த்த பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதியும் மனிதாபிமானத்துக்கான இணைப்பாளருமான பிரட்டிக் லியோன் இப்படி உறுதியளித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

கிழக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீள் குடியமர்வதில் உள்ள பிரச்சினைகள், பாதிப்புகள் குறித்து அவருடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்றுக் கலந்துரையாடினர்.

கொழும்பில் உள்ள ஐ.நாவின் அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்ற இச் சந்திப்பில் கூட்டமைப்பினர் ஐ.நா.வதிவிடப் பிரதிநிதியிடம்

(03ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் நாளை கண்டனப் பேரணி

கிளிநொச்சி, மார்ச்28

மனித நேயப் பணிகளில் ஈடுபடும் தொண்டர் அமைப்புகள் மற்றும் அந்த அமைப்பில் பணிபுரியும் பணியாளர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களைக் கண்டித்து நாளை கிளிநொச்சியில் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தப் பேரணி அதன் தலைமையகத்தில் இருந்து ஆரம்பமாகும். அரசசெயலகத்தை பேரணி சென்றடைந்ததும் கண்டனக் கூட்டம் நடைபெறும்.

அதைத் தொடர்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு விலாசமிடப்பட்ட மகஜர் அரச அதிபரிடம் கையளிக்கப்படும். (அ-1)

## போரின் வியூகத்தையே முற்றாக மாற்றிவிட்டிருக்கும் தாக்குதல்

**இராணுவ ஆய்வாளர் அத்தாஸ் கருத்து**

கொழும்பு, மார்ச் 28

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கட்டுநாயக்க வான் படைத் தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் மூலம் போரின் வியூகமே முற்றாக மாறிவிட்டது என்று பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் (03 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வான் தாக்குதல்: முக்கிய நாடுகள் மௌனம்

கொழும்பு, மார்ச் 28

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் விமானத் தாக்குதல் நடத்தி சுமார் 46 மணித்தியாலங்கள் கழிந்த நிலையிலும் அமெரிக்கா உட்பட முக்கிய நாடுகள் இத் தாக்குதலைக் கண்டிக்கும் கருத்து எதனையும் வெளியிடவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

அமெரிக்கா, பிரிட்டன் மற் றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடமிருந்தும் இதுபற்றி அபிப்பிராயம் வெளியாகவில்லை.

விடுதலைப் புலிகள் தங்கள் விமானங்கள் மூலம் அரச படைகளின் இராணுவ இலக்கு ஒன்றையே தாக்கியிருக்கின்றனர். தற்போதைய மோதல்களில் ஒரு பகுதியாகவே சர்வ தச சமூ கம் இதனைக் கருதுகிறது. இதனால் தான் கண்டனம் தெரிவிக்க வெளிநாடுகள் தாமதிக்கின்றன என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

**வான்புலிகளின் தாக்குதல் குறித்து**

## இணைத்தலைமைப் பிரதிநிதிகளுடன் வெளிவிவகார அமைச்சர் ஆராய்வு

கொழும்பு, மார்ச்28

விடுதலைப் புலிகள் கட்டுநாயக்கா விமானத்தளம் மீது நடத்திய வான் தாக்குதல், சமாதான வழியில் இறுதித் தீர்வு காணும் அரசாங்கத்தின் முயற்சிகளைப் பெரிதும் பாதிக்கும் - என்று வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

வான் புலிகள் நடத்திய தாக்குதலால், இலங்கையின் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி கூட்டிய மாநாட்டில் ஐ.தே.கட்சி பங்கேற்கவில்லை

**ஆனால் கூட்டறிக்கையில் அதன் பெயரும் சேர்ப்பு**

புலிகளின் விமானத்தாக்குதலை அடுத்து நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி கூட்டிய அவசர கட்சித் தலைவர்கள் மாநாட்டுக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. ஆனால், கூட்டறிக்கையில் ஐ.தே.கட்சி[illegible]ம் கைச்சாத்திட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இதில் உண்மையில்லை என்று ஐ.தே.க. செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

சகல கட்சி மாநாட்டில் ஐ.தே.கட்சி கலந்துகொண்டதாக அரசு பொய்யான தகவலை வெளியிட்டுள்ளதாக ஐ.தே.கட்சியின் ஊடகப்பேச்சாளர் கயந்த கருணாதிலக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவர்களின் மாநாட்டுக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இதன் காரணமாக அந்தக் கூட்டத்தில் ஐ.தே.க. பங்கேற்கவும் இல்லை.

இருந்தும் இக்கூட்டத்தில் ஐ.தே.கட்சி கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படும் கூட்டறிக்கையின் உள்ளடக்கத்துக்கும் எமது கட்சிக்கும் எதுவித பொறுப்பும் இல்லை என தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றார் கயந்த கருணாதிலக.

(மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வாழ்த்துகின்றோம்



### நவரத்தினலிங்கம் நவநீத்

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற வடக்கின் 101 ஆவது மாபெரும் துடுப்பாட்டத் தில் யாழ்.மத்திய கல்லூரி 10 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதில் 8 விக்கெட்டுக்களை வீழ்த்தி ஆட்ட நாயகனாகவும் தொடர்ந்து நடைபெற்ற ஒருநாள் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதில் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தி ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களைப் பெற்று ஆட்ட நாயகனாகவும் நவநீத் தெரிவானார். அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- பழைய மாணவர்கள்.

(59117)

## திருமண நல்வாழ்த்துக்கள்

இன்று (28.03.2007) புதன்கிழமை திருமண பந்தத்தில் இணையும்

சங்கானையைச் சேர்ந்த
திரு.திருமதி சுந்தரலிங்கம்
தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரன்
**சுசீபன்**

இணுவில் அங்களப்பாயைச் சேர்ந்த
திரு. திருமதி ந.சோமசுந்தரம்
தம்பதிகளின்
கனிஷ்ட புதல்வி
**சோமலதாங்கினி(லசோ)**

ஆகிய இருவரும் இணுவில் சிவகாமி அம்மன் அருளால் பதினாறு பேறு பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள்
ஸ்ரீமதி வடிவாம்பிகை.

'ஸ்ரீவித்தியா'
இணுவில் கிழக்கு, இணுவில். (59017)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### கனகசுந்தரம் சிவானந்தவேல்

மலர்வு 27.05.1945 — உதிர்வு 07.04.2006

திதி: பூர்வபக்க தசமி

ஆண்டொன்று மறைந்ததையா
இரு விழிகள் கண்ணீர் காயவில்லை
தினம் தினம் உங்கள்
நினைவில் தவிக்கின்றோம் ஐயா !

134, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (58994)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### அருள்ராசா ஜெந்தருபன்

காந்திஜி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அருள்ராசா ஜெந்தரூபன் 25.03.2007 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருள்ராசா மற்றும் இராசமலர் ஆகியோரின் அன்பு மகனாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2007) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காந்திஜி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (59130)

தகவல்:
குடும்பத்தினர்.

## சென்றல் நேசிங் ஹோம் போக்குவரத்துச் சேவை

அம்புலன்ஸ், வான், முச்சக்கரவண்டி (ஓட்டோ) தேவைப்படுபவர்கள் வீட்டில் இருந்து பின்வரும் தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொண்டு சேவை வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

350, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி. தொ.பே: 021 222 2263.

## COMPUTER EXPRESS

Institute of Information Technology
No 15, Srirambiyadi Lane, off Stanly Road, Jaffna.
Branch : No 167, Kasthuriyar Road, Jaffna.
TP.No: 021 222 8250, 0777 222 422

3 மாதகால
**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Book Premier + MYOB

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I :- 31/03/2007
Batch II : 01/04/2007
Batch III : 02/04/2007

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும்
செல்வி ராஜபூபதி
அவர்களின் அன்புத் தாய்
திருமதி
### செல்வம் பார்வதி

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

யாழ். போதனா வைத்தியசாலை
தாதிய உத்தியோகத்தர்
நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம். (59122)

## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி மேரி பற்றிமா வயித்தியாம்பிள்ளை தி.கு

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி பற்றிமா வயித்தியாம்பிள்ளை இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் 26.03.2007 திங்கட்கிழமை இறையடி இணைந்துவிட்டார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (28.03.2007) புதன்கிழமை மு.ப.9.30 மணியளவில் இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லச் சிற்றாலயத்தில் நடைபெற்று திருப்பலியின் பின்னர் இளவாலை சேமக்காலையில் இடம்பெறும்.

தகவல்:
அருட்சகோதரி
அன்சில்லா ஜேம்ஸ்,
யாழ். மாகாணத் தலைவி. (59127)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### துரைஐயா சுதாதரன்

கிராம சேவையாளர்,
விஞ்ஞான ஆசிரியர்

மண்ணுலகில் 13.09.1966 — விண்ணுலகில் 28.03.2006

நீ எம்மை விட்டுப் பிரிந்து இன்றுடன் ஓராண்டு நிறைவுபெறுகிறது. இத்தினத்தில் அவரை நினைவுகூர்ந்து அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டிநிற்கும்.

மகன் - சுதன்,
தாய், சகோதரர்கள், மைத்துனர்மார்,
மைத்துனிமார்(ஜமுனா, றஞ்சி),
பெறாமக்கள், மருமக்கள்.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம். (59128)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 03 - 10 - 1945 — உதிர்வு 26 - 02 - 2007

### அமரர் கந்தையா இரத்தினம்

(வயறிங் கிளி)

26.02.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (27.03.2007) செவ்வாய்க்கிழமை இல.43, பீற்றசன் லேன், வெள்ளவத்தை, கொழும்பு-6, ஸ்பான் ரவர் இல்லத்தில் நடைபெற்றன.

இன்று(28.03.2007)புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 19, கற்குளலேன்,
கொட்டடி, யாழ்ப்பாணம். (59125)

- குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 19 - 01 - 1946 — இறப்பு 20 - 03 - 2005

அமரர்
### வாமதேவன் இராசரத்தினம்

ஆண்டு இரண்டு சென்றாலும்
ஆறாது எங்கள் துயரம்.

32, மாரியம்மன் லேன்,
திருநெல்வேலி. (58872)

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

## நல்லூர் பிரதேச சபை

திருநெல்வேலிச் சந்தை வாகனத் தரிப்பிட வரி அறவீடு மற்றும் கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை, ஆட்டிறைச்சிக் கடைகளுக்கான

### மீள்கேள்வி அறிவித்தல்கள் - 2007

மேற்படி இறைச்சிக்கடைகளும் வாகனத்தரிப்பிடமும் 05.04.2007 தொடக்கம் 31.12.2007 வரை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி என்னால் கோரப்படுகின்றது

| விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய (வற் தவிர்ந்த) ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|
| 1) கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 139220.00 |
| 2) கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 120485.00 |
| 3) பலாலி வீதி, ஆடியபாதம் வீதி, பாடசாலை வீதி வாகனத் தரிப்பிடக் கட்டணம் (வாகனத் தரிப்பிட குறியீட்டில் மட்டும் நிறுத்துதல் வேண்டும்) | 250.00 | 2500.00 | 100000.00 |

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 03.04.2007 செவ்வாய்க்கிழமை மு.ப. 12.00 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 04.04.2007 புதன்கிழமை மு.ப. 12.00 மணிவரை

கேள்வி திறக்கும் திகதி : 04.04.2007 புதன்கிழமை பி.ப. 2.00 மணி

மேற்படி கேள்விகள் தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
26.03.2007 (அ/50870)

பொன்னையா வைரமுத்து,
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

## உடன் விற்பனைக்கு

85 ஸ்ரீ XXXX இலக்கமுடைய Honda 200 (சிவப்பு) மோட்டார் சைக்கிளும், 200-XXXX, 201-XXXX தொடர் இலக்கமுடைய ஆட்டோக்களும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0212226873, 0776569870

## உடன் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள சொந்தப் பாவனையில் உள்ள 226-XXXX இலக்கமுடைய வெள்ளை நிற மிற்சுபிசி தயாரிப்பிலான 13½ அடி நீளமுடைய அலுமினிய Body உடைய 4560CC கன்டர் ரக டெலிவறி வாகனம் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 226 3594

## மரண அறிவித்தல்



### இராமநாதபிள்ளை நாகம்மா

(மண்டைதீவு)

மண்டைதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதபிள்ளை- நாகம்மா 26.03.2007 திங்கட்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுரப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - இளையபிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற இராமநாதபிள்ளையின் அன்பு மனைவியும் தவமணிதேவி, விவேகானந்தா திருலிங்கநாதன் (கனடா), அறிவழகன்(ஜேர்மனி), காலஞ்சென்ற அன்பழகன் மற்றும் சர்ளா தேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் நாகேஸ்வரன், சியாமளாதேவி, ஜீவா, நிதி, ராஜகுலசிங்கம்(கனடா) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான சேதுராசா, கனகரட்ணம் ஆகியோரின் சகோதரியும் துவாரகி, தனுசியா, கனிமொழி, துவாரகன், திவாகரன், தட்சாயணி, கடாட்ஷணி, கஜானந்தா, மூபீசன், விதுசாளினி, திருனாத்,அஜித், தர்ஷன்,கிசோதரன், கஜானன், காருஜன்ஆகியோரது பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(29.03.2007) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
விவேகானந்தா
(மகன் - அப்பன்)
முதலாம் வட்டாரம்,
மண்டைதீவு.

தற்காலிக முகவரி:
இருபாலை வீதி, கோண்டாவில்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (58126)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## வான் புலிகளின் தாக்குதலிலும் அரசியல் லாபம் தேடும் முயற்சி

கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீதான வான் புலிகளின் தாக்குதல், தென்னிலங்கையில் பலத்த அதிர்ச்சி அலைகளை உருவாக்கியிருக்கும் அதேசமயம், பெரும் வாதப் பிரதிவாதங்களையும் தோற்றுவிக்கத் தவறவில்லை.

தென்னிலங்கைத் தேசமே பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கும் இச்சமயத்தில், குறுகிய அரசியல் வேறுபாடுகளைத் துறந்துவிட்டு, 'பயங்கரவாதத்திற்கு' எதிராக ஒன்றுசேர்ந்து எழுமாறு சகல அரசியல் கட்சிகளையும் மக்களையும் பகிரங்க அறிக்கை மூலம் அரசு ஒருபுறம் கோருகின்றது.

ஆனால், மறுபுறத்திலோ, இந்த நெருக்கடி விவகாரத்தை கையாளும்படி அரசினால் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட அமைச்சர்களே, இந்த விடயத்திலும் தமது குறுகிய அரசியல் வேறுபாடுகளை சாதித்துக்காட்ட விடாப்பிடியாக நிற்கின்றார்கள்.

முழுத்தேசமுமே இந்த விவகாரத்தில் பெரும் நெருக்கடியையும், அச்சுறுத்தலையும் எதிர்கொண்டிருப்பதாக அரசுத் தலைமை கூறினாலும், அத்தகைய விவகாரத்தில் கூட தமது அரசியல் குளறுபடித் தனத்தைக் காட்டுவதற்கு அமைச்சர்கள் பின்நிற்கவில்லை.

தங்களது குறுகிய அரசியல் சுயலாபங்களுக்காக தேசிய இனப்பிரச்சினையையே மிக மோசமாகக் கையாண்டமைதான் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் வரலாறு.

அதனால்தான் இந்த இலங்கைத்தீவு இன்று எதிர்கொள்ளும் அவலநிலைமை இவ்வளவு மோச நிலையை அடைந்தது. அத்தகைய பட்டறிவின் பின்னரும் அந்தப் புத்தியிலிருந்து - அந்தப் போக்கிலிருந்து - தென்னிலங்கை அரசியல்வாதிகள் திருந்தவேயில்லை. திருந்தப்போவதேயில்லை என்பதை அவர்களது தற்போதைய நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

அரசுத் தரப்பிலிருந்து - அமைச்சர் பதவிகளிலிருந்து - இரண்டு மூத்த அரசியல் பிரமுகர்கள் அண்மையில் கழற்றிவிடப்பட்டனர். அரசுத் தலைமையோடு அவர்கள் இருவருக்கும் ஏற்பட்ட கருத்து முரண்பாடு பெரும் அரசியல் பிணக்காக வெளிப்பட்டது.

அதையடுத்து, அரசின் உள்வீட்டு விவகாரங்கள் மற்றும் ஊழல், மோசடி பற்றிய தகவல்களை இந்த இரு முன்னாள் அமைச்சர்களும் மெல்ல மெல்ல அவிழ்த்து விடத் தொடங்கினர்; அம்பலப்படுத்த ஆரம்பித்தனர்.

அவற்றின் ஒரு கட்டமாக, அரசு அண்மையில் மேற்கொண்ட 'மிக்' விமானக் கொள்வனவில் பெரும்தொகைப் பணம் - பல நூறு கோடி ரூபா - மோசடி செய்யப்பட்டிருப்பதாக அந்த இருவரும்லஞ்ச, ஊழல்விசாரணை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்தனர். அந்த முறைப்பாடு பற்றிய விவரங்கள் பரபரப்புச் செய்திகளாகின. இந்த ஊழலில் பிரதான குற்றச்சாட்டு விரல், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷவை நோக்கியே நீண்டது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்தின் மீதான வான் புலிகளின் தாக்குதல் இடம்பெற்றதும் அந்தத் தேசியப் பாதிப்பிலும் அரசியல் லாபம் எனும் குளிர்காயப் புறப்பட்டு விட்டார்கள் அரசின் அமைச்சர்கள்.

'மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவது' போல அமைந்தது அவர்களது குற்றச்சாட்டு.

அரசின் 'மிக்' விமானக் கொள்வனவு தொடர்பாக முன்னாள் அமைச்சர்கள் வழங்கிய தகவல்களே மேற்படி கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீதான வான் புலிகளின் தாக்குதலுக்கு உதவின என்ற சாரப்பட அரசியல் குற்றச்சாட்டு அரசின் மூத்த அமைச்சர் ஒருவரினால் பகிரங்கமாகச் சுமத்தப்பட்டது.

தங்களுடைய தவறான அரசியல் அணுகுமுறையினாலும், செயற்றிறனின்மையாலும், கையாலாகத்தனத்தாலும் தேசத்துக்கு ஏற்படும் இழப்புகளையும் பாதிப்புகளையும் இவ்வாறு எதிரணி அரசியல்வாதிகள் மீதும் உண்மையை அம்பலப்படுத்தும் ஊடகவியலாளர்கள் மீதும் குற்றம் சுமத்தி, அதன்மூலம் அப்பொறுப்பிலிருந்து தப்பிக்கொள்வது தென்னிலங்கை ஆட்சியாளரின் வழிவழி வந்த பண்பு.

இப்படி முன்னாள் அமைச்சர்கள் மீது பொறுப்பற்ற முறையில் குற்றம் சுமத்தி, பொறுப்பிலிருந்து தங்களைத் தவிர்த்துக்கொண்டு, 'இவ்வாறான தேசிய அச்சுறுத்தலுக்கு எதிராகக் குறுகிய அரசியல் லாபங்களைத் துறந்துவிட்டு ஒன்றுபட்டு எழுக!' என்று அரசு மக்களைப் பார்த்து அறிவிப்பது அபத்தமானது.

அதுவும் புலிகளின் வான் தாக்குதலை அடுத்து, அரசின் கருத்தைத் தெரிவிப்பதற்குக் கூட்டப்பட்ட முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இவ்வாறு குறுகிய அரசியல் லாப நோக்கில் அரசுத் தலைவர்கள் நடந்துகொண்டு, மறுபுறத்தில் குறுகிய அரசியல் வேறுபாடுகளைத் துறந்துவிட்டு ஒன்றுபடுமாறு பகிரங்க அழைப்பு விடுப்பதில் அர்த்தமேயில்லை.

அர்த்தமேயில்லாத இத்தகைய குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும்போது, அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவற்றை உள்வாங்கும் 'அரசியல் பாமரத்தனம்' தென்னிலங்கையில் நிலவும் வரை - சரியான அரசியல் விழிப்புணர்வு தென்னிலங்கைக்கு ஏற்படாதவரை (அது ஏற்படுமா என்பது சந்தேகமே) - இத்தகைய வாய்வீச்சு அரசியல் உளறல்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் வரவேற்பும், அவர்களது அர்த்தமற்ற அலட்டல்களுக்கு குறுகிய அரசியல் லாபங்களும் கிடைப்பதும் தவிர்க்க முடியாததாகும்.

# புலிகளின் வான்வழி அச்சுறுத்தல் குறித்து சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேண்டும்

**ஜனாதிபதி தலைமையில் கூடிய சகல கட்சிகள் கூட்டறிக்கை**

கொழும்பு, மார்ச் 28

தற்கொலைப் பிரிவைக் கொண்ட அமைப்பான புலிகளிடம் விமானப்படைப் பலமிருப்பது இலங்கைக்கு மட்டுமல்ல தெற்காசிய பிராந்தியத்துக்கே பாரிய அச்சுறுத்தலாகும். சர்வதேச சமூகம் இந்த அச்சுறுத்தலைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடிய 13கட்சிகள் விடுத்துள்ள கூட்டறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட 13 கட்சிகள் இவ்வறிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் கூடினர். பயங்கரவாதத்திற்கு எதிராக அரசு எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் ஆதரவளிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கை விமானப் படையினரின் தாக்குதல் சக்தியை முறியடிக்க புலிகள் மேற்கொண்ட சாத்தியமற்ற முயற்சியை நாம் வன்மையாகக் கண்டிகின்றோம். புலிகளின் இலக்கை முறியடிக்க விமானப் படையினர் துணிச்சலுடன் மேற்கொண்ட நடவடிக்கைகளை நாம் பாராட்டுகின்றோம்.

தேசியப்பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் விடுக்கும் இச்சம்பவத்தை அடுத்து பிரிவினைவாத பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்க அரசு எடுக்கும் சகல முயற்சிகளுக்கும் ஆதரவு வழங்கும்படி நாம் ஒன்றிணைந்து பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, பொது ஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி, மலையக மக்கள் முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, பூமி புத்ர கட்சி ஆகியன இந்தக் கூட்டறிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. (சி)

## வேலணையைச் சேர்ந்த மூவரைக் காணவில்லையாம்

வேலணையைச் சேர்ந்தமூவரைக்காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேலணை மேற்கு, 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராசா விமலேஸ்வரன் (வயது - 27), சிவநாதன் மதிவதனன் (வயது - 23) ஆகிய இருவரும் கடந்த 22 ஆம் திகதி வேலணையில் இருந்து பிற்பகல் 5.30 மணியளவில் புங்குடுதீவுக்கு சென்றதாகவும் அதன்பின்னர் அவர்கள் காணாமற்போயுள்ளதாகவும் அவர்களது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

வேலணை மேற்கு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கோபாலப்பிள்ளை இளங்குமரன் (வயது -25) என்பவர் கடந்த 23 ஆம் திகதி தனது வீட்டிலிருந்து நுணாவிலில் உள்ள தனது நண்பர் ஒருவர் வீட்டிற்கு சென்றார் இது வரை அவர் வீடுதிரும்பவில்லை என்று ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-1-4)

## சிறிபதிக்கு மீண்டும் பிணை மறுப்பு ஏப்.10 வரை விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 28

அரச வாகனம் ஒன்றைத் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் அமைச்சரான சிறிபதி சூரியாராய்ச்சி எம்.பியின் விளக்கமறியல் எதிர்வரும் 10ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

கடுவெல மேலதிக நீதிவான் லக்மால் விக்கிரமசூரிய முன்னிலையில் நேற்று சூரியாராய்ச்சி மீண்டும் ஆஜர் செய்யப்பட்டார்.

அச்சமயம், விசேட காரணங்களின் அடிப்படையில் அவரைப் பிணையில் விடக்கோரி அவரது சட்டத்தரணிகள் வாதிட்டனர். எனினும், அக்கோரிக்கையை நிராகரித்த நீதிவான், விளக்கமறியல் உத்தரவை நீடித்தார்.

நாடாளுமன்ற அமர்வுகளுக்கு சிறிபதி சூரியாராய்ச்சி செல்ல விரும்பினால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு சிறை அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதனையும் நீதிவான் சுட்டிக்காட்டினார். (சி)

## மங்களவுடன் தொடர்புடைய நிதிமோசடி: வங்கிக் கணக்குகளை சோதிக்க அனுமதி

கொழும்பு, மார்ச்28

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் பொறுப்பில் துறைமுக அபிவிருத்தி அதிகார சபை இயங்கிய சமயம் அந்த சபையின் ஊடாக 'மாத்தறை பவுண்டேஷன்' என்ற நிதியத்துக்கு பன்னிரண்டு மில்லியன் ரூபா வழங்கப்பட்டது என்று கூறப்படுவது தொடர்பாக வங்கிக் கணக்குகளைப் பரிசோதிக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கொழும்பு பிரதம நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை, 'மாத்தறை பவுண்டேஷன்' ஆகியவற்றின் வங்கிக் கணக்குகளைப் பரிசீலிப்பதற்கே கொழும்பு பிரதம நீதிமன்ற நீதிவான் குசல சரோஜினி வீரவர்த்தன நேற்று அனுமதி வழங்கினார்.

மேற்படி நிதிக் கைமாற்றம் தொடர்பான வங்கிக் கணக்குகளைப் பரிசீலிக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று கொழும்பு பிரதம நீதிமன்றத்தில் அனுமதி கோரினர்.

மங்கள சமரவீரவின் சொந்த மாவட்டமான மாத்தறையில் செயற்படும் 'மாத்தறை பவுண்டேஷன்' என்ற நிதியத்துக்கு துறைமுக அதிகாரசபையில் இருந்து மோசடியான முறையில் நிதி கைமாறப்பட்டது என்ற கோணத்தில் - குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தற்போது விசாரணைகளை நடத்திவருகின்றனர் எனக் கூறப்படுகிறது. (சி)

## புலிகளுக்கு இரும்புக் குண்டுகளை கடத்துபவர் என்ற சந்தேகத்தின் பேரில் வவுனியா இளைஞன் தமிழகத்தில் கைது

தமிழகத்தில் இருந்து இரும்புக் குண்டுகளை கடத்திச் சென்று விடுதலைப் புலிகளுக்கு வழங்குபவர் என்ற சந்தேகத்தின் பேரில் வவுனியா இளைஞன் ஒருவன் சென்னையில் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து மூன்று லட்சம் ரூபா பணமும் 25 ''கிறெடிற்'' கார்ட்டுகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வவுனியா தோணிக்கல்லைச் சேர்ந்த நிமால் என அழைக்கப்படும் கனகரத்தினம் சஞ்ஜித்கான் (வயது 31) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அடிக்கடி தமிழகம் வந்து போகும் இவரின் நடமாட்டத்தில் சந்தேகம் கொண்ட ''கியூ'' பொலிஸார் திருவான்மியூரில் இவர் தங்கியிருந்த ஹோட்டலை சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

ஆனால், பொலிஸாரிடம் பிடிபடாமல் அவர் தப்பிவிட்டார்.

வெட்டுவாங்கேணியில் உள்ள பங்களா ஒன்றில் இவர் தங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து நேற்று முன்தினம் இரவு அந்த பங்களாவை பொலிஸார் சுற்றிவளைத்தனர். அங்கு வைத்து அவர் கைதானார். அவரிடம் இருந்து 3 லட்சம் ரூபா பணமும் 25 கிரடிற் காட்டுகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன. (அ-1)

### கட்டுநாயக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு இடங்களில் உள்ள அகதி முகாம்கள் கண்காணிக்கப்படுகின்றன.

இந்தியக் கடற்படையின் அதிநவீன கப்பல்கள் விரைவில் தமிழகக் கடலோரப் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபடவும், மிகவும் தாழ்வாகப் பறந்து செல்லும் சிறிய ரக விமானங்களையும் துல்லியமாகக் கண்டறியும் அதிநவீன ராடர்களை நிறுவவும் வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது. (அ-1)

### நாளை

பங்குனி - 15
வியாழக்கிழமை
29.03.2007
திதி: ஏகாதசி
பிற்பகல் : 04.59
நட்சத்திரம்: ஆயிலியம்
முன்னிரவு : 11.36
[illegible]
சுபநேரம் : 07.43 - 09.13
ராகுகாலம் : 01.43 - 03.13

### போரின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

பிரபல பாதுகாப்பு சஞ்சிகையான 'ஜேன்ஸ் வீக்லி' இதழின் இலங்கை பிரதிநிதியும் பிரபல இராணுவ ஆய்வாளருமான இக்பால் அத்தாஸ், கட்டுநாயக்க மீதான தாக்குதல் குறித்து பி.பி.சி ஆங்கில சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இரண்டு தசாப்தங்களாக தரை, கடல் போர் அரங்குகளில் மாத்திரமே இடம்பெற்று வந்த சண்டையில் தற்போது விடுதலைப் புலிகளின் வான் படைப் பலத்தின் பரிமாணத்தை - அதன் பிரயோகத்தை - நாம் தற்போது காண்கின்றோம்.

முதல் தாக்குதலிலேயே தங்களால் தாக்க மாத்திரமல்ல, தாக்கிவிட்டுத் திரும்பிச் செல்லவும் முடியும் என்பதனை நிரூபித்துக் காட்டியதன் மூலம் போர் அரங்கின் போக்கையே மாற்றியுள்ளனர்.

தற்போது படைத் தளங்கள், முக்கிய பிரமுகர்கள் உயர் பாதுகாப்பு அதிகாரிகளின் இல்லங்கள், கடற்படைக் காவுகலங்கள் போன்ற முக்கிய இலக்குகள் எல்லாமே பாதுகாப்பு அற்றனவாகி விட்டன - என்றார்.

இதேவேளை இத்தாக்குதல் குறித்து பி.பி.சிக்கு கருத்துத் தெரிவித்த மேற்குலக இராஜதந்திரியொருவர், மிகவும் கவனத்தை ஈர்க்கும் வகையிலான இத்தாக்குதல் ஒரு சீரிய தாக்குதல் மாத்திரமல்ல பெரிய பிரச்சாரத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்பதோடு, கொழும்பி[illegible] தங்கள் தளத்திற்கு திரும்புவது என்பது ஒரு [illegible] நிற்கிறது - எனவும் தெரிவித்தார். (சி)

## இன்று திறப்பு விழா

யாழ். மாவட்ட தொழிற்துறைத் திணைக்களம் மற்றும் உலகக் கனேடிய பல்கலைக்கழக நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் கணனி திருத்தும் பயிற்சி நிலையம் இன்று கொட்டடியில் திறந்து வைக்கப்படுகின்றது.

### கிழக்கு அகதிகளை அவர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைத்த விடயங்கள் வருமாறு:-

✱ அரசாங்கமும் இராணுவமும் தமது இராணுவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொடர்ந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் இடம்பெயர்வோர் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது.

✱ இடம்பெயர்ந்த மக்களைத் தமது இராணுவ நலனுக்கு வசதியாக - தாம் விரும்பிய இடங்களில் - அரசு மீளக் குடியேற்றுவதற்குத் திட்டமிடுகிறது. அகதிகளின் மீள்குடியமர்வை அரசாங்கத்தின் பொறுப்பில் விடமுடியாது.

✱ பலாத்காரமாக, மக்களை அச்சுறுத்தி, இராணுவ நடவடிக்கைகளுக்கு வாய்ப்பான இடங்களில் அரசு அகதிகளை குடியேற்றிவருகின்றது.

✱ அகதிகளின் பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான உதவிகள் சரியான முறையில் சீராக்கப்பட்டு, ஐ.நாவின் கண்காணிப் பில் அவர்கள் மீளக் குடியமர்த்தப்படவேண்டும்.

✱ சாவதேச நாடுகளில் அகதிகளை கண்காணிக்கும் பணியை ஐ.நா. மேற்கொள் வது போன்று, எமது அகதிகளையும் கண்காணிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

கூட்டமைப்பு எம்.பிக்கள் முன்வைத்த விடயங்கள் குறித்துப் பதில் அளித்த ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி -

கிழக்கு அகதிகள் நிலைமை குறித்து மிகவும் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம். அவர்களில் மீளக்குடியமர்வில் அக்கறை கொண்டுள்ளோம் -

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு சென்று அங்குள்ள நிலைமையை நேரில் ஆராய்ந்துள்ளேன்.

அகதிகளை மீள் குடியமர்த்தும் விடயம் சம்பந்தமாக, ஐ.நாவுக்கும் அதனோடு இணைந்த அமைப்புக்களுக்கும் சிபாரிசுகளைச் செய்யவுள்ளேன். சர்வதேச அமைப்புகளின் உதவிகள் கோரி விரைவில் வேண்டுகோள் விடுக்கப்படும் -

அகதிகளின் விருப்பத்தின் பேரில் அவர்களை மீளக் குடியமர்த்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பேன் - என்று உறுதியளித்தார். (அ-1)

### குடாநாட்டின் குட்டிச் செய்திகள் - யாழ்ப்பாணம்

## யோக சுவாமிகள் குருபூசை நாளை

யாழ்ப்பாணம், மார்ச்28

சிவதொண்டன் சிவயோக சுவாமிகள் குருபூசை நிகழ்வு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நாளை வியாழக்கிழமை சிவதொண்டன் நிலையத்தில் நடைபெற உள்ளது.

முற்பகல் 9.30 மணிக்கு விசேட அபிஷேக ஆதாதனைகளுடன் குருபூசை ஆரம்பமாகி, மகேஸ்வர பூசையுடன் நிறைவு பெறும். (அ-1-202)

## தந்தை செல்வா பிறந்தநாள் மலரஞ்சலி

தந்தை செல்வாவின் 109 ஆவது பிறந்தநாள் மலரஞ்சலி நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு முற்றவெளியில் உள்ள தந்தை செல்வா நினைவுத் தூபி அருகில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுத் தலைவர் வண.கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் நடைபெறும்.

அஞ்சலி நிகழ்வில்கலந்துகொள்வோரின் வசதிகருதி சைக்கிள் மற்றும் வாகனங்களை யாழ். பொது நூலகத்தின் முன்னால் நிறுத்துவதற்கு விசேட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (அ-202-68)

## மினிபஸ் சாரதி சுட்டுக்கொலை

யாழ். செயலகத்துக்குச் சமீபமாக கச்சேரி - நல்லூர் வீதியில் நேற்றுமாலை 5 மணியளவில் மினிபஸ் சாரதி ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கண்டி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரி. சந்திரகாந்த் (வயது 23) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் எனத் தெரியவந்தது.

யாழ். செயலகத்துக்குச் சமீபமாக உள்ள கடை ஒன்றுக்கு முன்பாக இவர் நின்று கொண்டிருந்த வேளையில், மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. படுகாயம் அடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட அவர் இடைவழியில் உயிரிழந்தார். (அ-1)

## கிழக்கு மாணவர்களுக்கு குடாநாட்டில் நிதி சேகரிப்பு

கிழக்கில் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக, யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள் நிதியுதவி வழங்க முன்வந்துள்ளனர் என்று தமிழ் மாணவர் ஒன்றிய யாழ். மாவட்டப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாரிய சுமைகளுக்கு மத்தியில் கல்வியினைத் தொடரும் குடாநாட்டு மாணவர்கள் தம்மால் இயன்ற உதவியை தமது சகோதர மாணவர்களுக்கு வழங்கும் விதமாக பாடசாலை ரீதியாக நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர் என அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ முகாம் அருகே தற்கொலைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொம்மாந்துறை படைமுகாம் அருகே உள்ள ஈ.பி.டி.பி. கட்சியினரின் அலுவலகம் ஆகியவற்றை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இது என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலில் ஈ.பி.டி.பி. அலுவலகம் பலத்த சேதமடைந்திருக்கிறது.

நேற்றுக்காலை 6.45 மணியளவில், கொம்மாந்துறை படைமுகாம் முன்பாக காவலரண் ஒன்றைத் தாண்டிச் சென்ற உழவு இயந்திரம் ஒன்று திடீரென முகாமின் நுழைவாயில் ஊடாக உட்பிரவேசிக்க முயன்ற சமயம், இராணுவத்தினர் அதன் மீது தாக்குதல் நடத்த முயற்சித்த போது, அது வெடித்துச் சிதறியது என்று தெரிவிக்கப்படுகிறது. அச்சமயம் அப்பகுதியில் இராணுவத்தினர் பலரும், பொலிஸாரும் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அருகே அமைந்திருந்த ஈ.பி.டி.பி. முகாமிலும் அதன் உறுப்பினர்கள் பலர் தங்கி இருந்தனர்.

உழவு இயந்திரம் பெரும் ஓசையுடன் வெடித்தது. அதனால் அப்பிரதேசம் அதிர்ந்தது. இராணுவத்தினர் மூவரும், ஈ.பி.டி.பியினர் நால்வரும் குண்டு வெடிப்பில் சிக்கி உயிரிழந்தனர் என்று முதலில் வெளியான தகவல்கள் தெரிவித்தன.

அப்பகுதியில் கடமையில் இருந்த நான்கு இராணுவத்தினர், இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சோதனைச் சாவடியை கடந்து சென்றுகொண்டிருந்த பொதுமக்கள் உட்பட 28 பேர் காயங்களுக்குள்ளாகினர். காயமடைந்தவர்களில் பெண் ஒருவரும் அடங்குகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு பொதுமருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். காயமடைந்த பொதுமக்களில் இருவர் பின்னர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் காரணமாக செங்கலடி பிரதேசத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

**இந்தத் தாக்குதலிலும் புலிகள் தோல்வி**

இத்தாக்குதலையடுத்து செங்கலடி இராணுவ முகாமை அண்டியுள்ள அதிகமான மக்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படு கிறது.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்ததாவது:-

200 கிலோ கிராம் எடையுடைய வெடிபொருள் நிரப்பப்பட்ட உழவு இயந்திரத்தைச் செலுத்தி வந்த புலிகளின் தற்கொலைதாரி செங்கலடி இராணுவமுகாமினுள்ளே அதைச் செலுத்த முற்பட்டார்.

அவ்வேளையில் படையினர் உஷாரானதால் உழவு இயந்திரம் உள்ளே நுழைய முடியாதபடி நுழைவாயிலில் வைத்தே வெடிக்கவைக்கப்பட்டது. இதன் காரணமாக இரண்டு படையினரும், சிவிலியன்கள் 4 பேரும் உயிரிழந்தனர். இரண்டு படையினரும், 18 பொதுமக்களும் காயமடைந்தனர். உழவு இயந்திர உதிரிப்பாகங்கள் துண்டு துண்டாக வெடித்துச் சிதறின. கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மீது புலிகள் நடத்திய தாக்குதல் தோல்வியில் முடிந்ததனாலே இந்தத்தாக்குதலைப் புலிகள் நடத்தியுள்ளனர்.

ஆனால், இந்தத் தாக்குதலும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளது. இந்தத் தாக்குதலையடுத்து அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது - என்றார்.

இந்தத் தாக்குதலில் தமது தரப்பில் மூன்று உறுப்பினர்கள் உயிரிழந்தனர். அத்துடன் எமது உறுப்பினர்களுக்கு காலை உணவு கொண்டுவந்த அவரது உறவினரான 12 வயதுச் சிறுவன் ஒருவரும் கொல்லப்பட்டார் என ஈ.பி.டி.பி. அறிவித்துள்ளது.

இதேவேளை - இந்தத் தாக்குதலில் இரண்டு பெண் இராணுவத்தினர் உட்பட பத்து இராணுவத்தினரும் 16 ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுமாக மொத்தம் 26 பேர் கொல்லப்பட்டனர் என்றும் 30 பேர் காயமடைந்தனர் என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(சி)

## இணைத்தலைமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புக்கு உண்டாகியுள்ள அச்சுறுத்தல் குறித்தும் அவர் இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளிடம் விவரித்ததாக அறியப்படுகிறது. அரசின் வான் பாதுகாப்பு நிலைக்குள் ஊடுருவும் அளவுக்கு விடுதலைப் புலிகள் ஆற்றல் பெற்றிருப்பது குறித்தும் கலந்துரையாடலின்போது பேசப்பட்டதாகவும் தெரியவருகிறது.

அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஒ பிளேக், ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைத்துவத்தின் பிரதிநிதியான ஜேர்மன் தூதுவர் ஜேர்கன் வீர்த், ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் ஜூலியன் வில்சன், நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், ஜப்பானின் தூதரகப் பொறுப்பதிகாரி என் இயட்டோ ஆகியோர் வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித ஹோகன்ன மற்றும் அமைச்சின் மூத்த அதிகாரிகளும் கலந்துரையாடலின் போது பிரசன்னமாகி இருந்தனர். (அ)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதல்களில் ஈடுபடுவது மேலும் இரத்த ஆறு ஓடச் செய்வதற்கும் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்கவுமே வகை செய்யும். ஆகையால், முன் நிபந்தனை எதுவுமின்றி இரண்டு தரப்புகளும் உடனடியாகப் பேச்சுக்குத் திரும்பவேண்டும் - என்று செயலாளர் நாயகம் கேட்டுள்ளார்.

(அ)

## கடல் போக்குவரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடலில் செல்லும் பெரியகப்பல்கள், துருப்புகளை கடல்வழியாக நகர்த்துதல் போன்ற பாதுகாப்புச் செயற்பாடுகள் மீதும் இது நேரடியாக அச்சுறுத்தலை உருவாக்கியிருக்கிறது.

விடுதலைப் புலிகள் தங்கள் தாக்குதலுக்கு பயன் படுத்தியிருப்பது செக் நாட்டுத் தயாரிப்பான 'இசற் - 143' ரக விமானம் என்று நம்பப்படுகின்றது. இரட்டை ஆசனம் உள்ள இந்த இலகு ரக பயிற்சி விமானம் மூலம் புலிகள் நடத்தியிருக்கும் தாக்குதல் இலங்கை அரசுப் படைகளுக்கு உளவியல் ரீதியில் ஒரு பெரும் பின்னடைவு என்பதுடன் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பெரும் அடி என்று கருதப்படுகின்றது.

- இவ்வாறு பாதுகாப்பு ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. (சி)

## ஷெல் தாக்குதல்களால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் தாக்குதல்களால் வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்கள் அதிர்ந்து கொண்டிருப்பதாக பிரதேச செய்தியாளர்கள் ஊர்ஜிதம் செய்தனர்.

ஷெல் தாக்குதல்களின் அதிர்வை குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் உணரக் கூடியதாக இருந்தது. பல்குழல் எறிகணைகளின் பயங்கரச் சத்தத்தால் மக்கள் மத்தியில் பயப் பிராந்தி நிலவியது.

(அ-1-155-115)


## அறிவித்தல்

முருகையன் கோயிலடி, நெல்லியடி, கரவெட்டி என்ற விலாசத்தைச் சேர்ந்த **அழகசாமி செட்டியார் சுப்பையா** என்ற பெயரையுடைய நான் இதுவரை காலமும் சுப்பையா என்ற பெயராலேயே அழைக்கப்பட்டு வந்தேன் என்றும் இன்று தொடக்கம் நான் எனது சுயவிருப்பத்துடனும் தீர்க்கமான முடிவுடனும் எனது பெயரை **பாஸ்கரன்** என்று மாற்றி அமைத்துள்ளேன் என்றும் நான் ஒப்பமிட வேண்டிய சகல பத்திரங்களிலும் **பாஸ்கரன்** என்றே ஒப்பமிடுவேன் என்றும் இத்தால் சகல பொதுமக் களுக்கும் தெரிவிக்கின்றேன்.

(59111) அ.பாஸ்கரன்.

## பொருள்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு வீடு தேவை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைக்கு மேற்படி தேவைக்காக ஒரு வீடு தேவை. யாழ்.கிளை தலைமைக் காரியாலயத்திலிருந்து 1 - 2 கிலோ மீற்றர் தூரத்தில் அமைவது அவசியம். விவரங்களுடன் 03.04.2007 இற்கு முன்னதாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,
இ.செ.ச., யாழ்.கிளை.

(சி-50872)

## கப்பல், விமான பொதிகள் சேவை

**கொழும்பு - யாழ்ப்பாணம்**

உடனடி கப்பல், விமான பொதிகள் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பத்துக் கிலோவிற்கு (10Kg) மேற்பட்ட பொதிகளே ஏற்றுக்கொள்ளப்படும்.

(சி-50875)

## விற்பனைக்கு

Monitor (Viewsonic) Casing
UPS(650w) Power (450w)
என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பே. 0779785739


## கண்ணீர் அஞ்சலி

சங்கானை ப.நோ.கூ. சங்கத்தின் கிளை முகாமையாளரும்,
எமது சங்க உறுப்பினருமாகிய
சு.தவத்துரை அவர்களின் அன்பு மகள்

### செல்வி த.பிரதீபா

(மாணவி, யா/விக்டோரியா கல்லூரி, சுழிபுரம் - க.பொ.த. (உ/த) 2007)

அவர்கள் 26.03.2007 இல் மரணமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கானை ப.நோ.கூ.ச. பணியாளர்,
சி.சே.க.கூ. சங்கம் (வ-து)

(சி-50874)

## மரண அறிவித்தல்

### செல்லையா சந்திரசேகரம் (பொன்னு)

குழவியடி அம்மன் கோயில், கரணவாய் மத்தி, நவிண்டிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சந்திரசேகரம் 27.03.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் கெங்காதேவி, கெங்காதரன், மங்கையர்க்கரசி, ரதிதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசையா, தவனேஸ்வரி, தவராசா, சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமனும் கிருஸணதாஸ், விஜிதா, விஜயதாஸ், லாவினன், திவாகரன், சஞ்சிதன், காருகன் ஆகியோரின் அன்புப் பேரனும் தனுஜன், வினிஜா, அங்கவி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.03.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


குழவியடி அம்மன் கோயில்,
கரணவாய் மத்தி,
நவிண்டில், கரவெட்டி.

தகவல்:
இ.கிருஸ்ணதாஸ்
(பேரன்)

விழிநீருடன் சுமந்து நிற்கின்றோம்

# இன்றோடு பதினைந்து ஆண்டுகளை......

புன்னகை சிந்த தாய்மடியில்!
11 - 08 - 1921



கண்ணீர் சிந்த அவனடியில்!
28 - 03 - 1992

அமரர்

### இளையதம்பி ஜெகசோதி

(இளைப்பாறிய ஆசிரியர்,
யாழ்.வேலணை மத்திய மகா வித்தியாலயம்.)

மாவை தந்த மைந்தனே!
இந்த மண்ணை விட்டு - நீ
தொலைதூரம் சென்றதெங்கே?
சோதியொன்று அணைந்தது -அன்று
குடும்பமே ஒரு கணம் அதிர்ந்தது!
கல்விச் சமூகமே ஒருகணம் ஸ்தம்பித்தது!
நீ மீளாது மௌனித்திருந்தாலும்
என்றேனும் ஒருமுறை - உன்
மௌனம் கலையுமென
விழிநீருடன் காத்திருக்கின்றோம்
இன்றுடன் பதினைந்து ஆண்டுகளாக!
உன் திருமுகத்தை இன்னும் - நீ
மறைத்து வைத்திருப்பதேனோ?
இன்றுவரை புரியவில்லை!
ஒருமுறையாவது உன் திருமுகம் காட்டு
மறுபடியும்நாம் பார்த்துவிடத்
- துடிக்கின்றோம்!
ஜெகசோதியாய் வாழ்ந்துகாட்டிய - நீ
உண்மையிலேயே ஜெக ஜோதிதானடா!

"உங்களை நினைக்காத நாட்களும் இல்லை
உங்கள் நினைவின்றி நாங்களும் இல்லை"

திரு.திருமதி க.பரமேஸ்வரன்
கொழும்பு.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சூசைநாதன் டனிலஸ்ராஜ்



பெரியவிளான் புனித அந்தோனியார் கோயிலடியைச் சேர்ந்த சூசைநாதன் டனிலஸ்ராஜ் 25.03.2007 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சூசைநாதன் - அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் ஸ்ரீபன்ராஜின் அன்புச் சகோதரனும் உரும்பிராயைச் சேர்ந்த அற்புதம் பிலிப், வில்லியம் சாமுவேல் மரியம்மா, மரியதாஸ், இராசம்மா மற்றும் பெரியவிளானைச் சேர்ந்த முடியப்பு அருளம்மாவின் பெறாமகனும் காலஞ்சென்ற செபமாலை ஞானப்பூ மற்றும் யோசேப்பு திரேசம்மா, அன்னலட்சுமி யோசேப்பு எலிசபெத், கிளரன்ஸ் ஜெயபோல் மேரியோகராணி ஆகியோரின் மருமகனும் பற்றிக் நிர்மலன், பற்றிக் ரஜனிகாந், பவுலீசம்மா, அன்ரனி மீனா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் றொசானின் மைத்துனரும் ஜீவிதா, டனில், கிளின்ரன், ஜோண்சன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (28.03.2007) முற்பகல் 10 மணிக்கு இரங்கல் திருப்பலியுடன் புனித அந்தோனியார் சேமக்காலையில் இடம் பெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புனித அந்தோனியார் கோயிலடி,
பெரியவிளான்.

(59139)

தகவல்:
றொசான் (மைத்துனர்)
(கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

### கனகசபாபதி விசாகப்பெருமாள் (இந்து)



கட்டைப்பிராயைச் சேர்ந்த கனகசபாபதி விசாகப்பெருமாள் நேற்று(27.03.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி (போஸ்ட் மாஸ்டர்) - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் கோமளாவின் (பொறுப்பதிகாரி, பிரதேச சபை, நீர்வேலி) கணவரும் காலஞ்சென்றவர்களான சிவசண்முகராஜா, தியாகராஜா ஆகியோரின் சகோதரனும் ஜெகதீஸ்வரி (ஆசிரியை), மங்கையர்க்கரசி (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும் கௌரி(சுமங்கலா - லண்டன்), மிதிலா ஆகியோரின் சிறியதந்தையும் சர்வானந்தனின் மாமனும் நிகல்யா, நிசங்கா, ஹரீனன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (28.03.2007) புதன்கிழமை மு.ப.10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டப்பிராய்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
வி.கோமளாதேவி [மனைவி],
[பொறுப்பதிகாரி, பிரதேசசபை, நீர்வேலி]
சிவஸ்ரீ ந.கேதீஸ்வரக்குருக்கள்
[மைத்துனர் - அனுராதபுரம்]

### நாகலிங்கம் நடேசன்



வேலணையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நடேசன் 26.03.2007 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - முத்தம்மா தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற சின்னத்துரை-செல்லம்மா தம்பதியரின் மருமகனும் சறோஜினியின் அன்புக் கணவரும் அமிர்தா (அமுதா -நல்லூர்), முருகதாஸ் (ஜேர்மனி), வேல் முருகதாஸ்(கனடா), சூரியகலா (பிரான்ஸ்), அருணா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகேஸ்வரன் (யூரோவில் நிறுவனம்), உதயா, சுமதி, தனபாலசிங்கம், லட்சுமிகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற அன்னம்மா, காலஞ்சென்ற சிவக்கொழுந்து, கனகசபாபதி, ராசலிங்கம், காலஞ்சென்ற கணேசன், காலஞ்சென்ற சிவயோகம், சிவமலர், சிவதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவதா, காலஞ்சென்ற தரணிகா, சிந்துஜன், லாவண்யா(மாணவி -யா/கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயம்), அபிராஜன் (மாணவன், யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), சௌமியன் (மாணவன், சென்.பெனடிக் வித்தியாலயம்) ஆகியோரின் பேரனும் மிதுஷனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.03.2007) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காகஎடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

91A, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர் - யாழ்ப்பாணம்

(59138)

தகவல்:
யோகேஸ்வரன் - அமிர்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.